

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முக்குலத்தோர் புலிப்படை தலைவரும், நடிகருமான கருணாஸ் அவர்கள் சந்தித்து பேசினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி

# தூய்மைப் பணியாளர்களுக்கு 3 வேளையும் இலவச உணவு!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, அக். 25-

தமிழ்நாட்டில் உள்ள தூய்மைப் பணியாளர்களின் நலன் கருதி, அவர்களுக்கு மூன்று வேளையும் இலவச உணவு வழங்கும் திட்டத்தை முதற்கட்டமாக சென்னை மாநகராட்சியில் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அரசாணைப்படி, "தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 14.08.2025 அன்று நடைப்பெற்ற அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு நிதித்துறை அமைச்சர் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கப்படுவது முக்கிய இடம்பெற்றது.

அப்போது அவர், "தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணியை அதிகாலையில் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில், காலை உணவு சமைப்பதற்கும், அதை பணிபுரியும் இடத்திற்கு கொண்டு வந்து அருந்துவதற்கும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சனைகளுக்கு தீர்வாக நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக மற்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப் படும்" என்றார்.

இந்த நிலையில் தூய்மைப் பணியாளர்களுக்கு சென்னை மாநகராட்சியில் மூன்று வேளை உணவு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 29,455 பேருக்கு 512 இடங்களில் 3 வேளையும் உணவு வழங்க ரூ.186.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அரசாணை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

### பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் :

# இந்தியா கூட்டணியின் முதலமைச்சர் வேட்பாளர் தேஜஸ்வி யாதவ்!

பாட்னா,அக்.25-

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் மகாபந்தன் கூட்டணியின் முதலமைச்சர் வேட்பாளராக தேஜஸ்வி யாதவ் அறிவிக்கப்பட்டுள்ளார். 243 தொகுதிகளை கொண்ட பீகார் சட்டமன்றத்திற்கு அடுத்த மாதம் 6 மற்றும் 11 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. அதன்படி நவம்பர் 6ம் தேதி முதற்கட்ட தேர்தலில் 121 தொகுதிகளுக்கும், 11ம் தேதி இரண்டாம் கட்ட தேர்தலில் 122 தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெற இருக்கிறது. இதனைத் தொடர்ந்து 14ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இந்த தேர்தலில் ஐக்கிய ஜனதாதளம், பா.ஜனதா அடங்கிய தேசிய ஜனநாயக கூட்டணி, காங்கிரஸ் இடம் பெற்ற ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைமையிலான இந்தியா கூட்டணி (மெகா கூட்டணி) , பிரசாந்த் கிஷோரின் ஜன சுராஜ் கட்சி ஆகியவற்றிற்கு இடையே மும்முனை போட்டி நிலவுகிறது.

இந்நிலையில் இந்தியா கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளார். அதன்படி காங்கிரஸ் தலைவர் அசோக் கெலாட் ,லாலு பிரசாத் யாதவ் மகன் தேஜஸ்வி யாதவை முதல்வர் வேட்பாளாராக அறிவித்தார். தேஜஸ்வி யாதவ் ஏற்கனவே பீகாரின் துணை முதல்வராக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேஜஸ்வி யாதவ் முதலமைச்சராக வெற்றி பெற்றால் இந்தியாவின் இளம் முதலமைச்சர் என்ற பெயரை பெறுவார். இதனிடையே நிதிஷ் குமார் தலைமையில் தேர்தலை சந்தித்தாலும் வெற்றிக்கு பின்பே முதலமைச்சரை தேர்வு செய்வோம் என ஒன்றிய அமைச்சர் அமித்ஷா முன்பு கூறி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேள்விக்குறியாகி இருக்கும் தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மை!

## "பீப்பிள்'ஸ் டெமாக்கரசி" தலையங்கம்!

தலைமைத் தேர்தல் ஆணையம் ஜீன் 25 அன்று வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision) மேற் கொண்ட சமயத்தில் அது கூறிய வாக்காளர் சுத்திகரிக்கும் நோக்கத்திற்கு அப்பால் அதற்கு வேறு பல காரணங்கள் இருப்பது விரைவில் தெளிவான முறையில் தெரிந்துவிட்டது.

**கணக்கெடுப்பாளர் வேலை - வாக்காளர் மீது சுமத்தல்!**

வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்திற்குக் கூறப்பட்ட மூன்று முக்கிய அம்சங்களில் முதலாவது அம்சம், வாக்காளர் பட்டியலில் ஒருவர் இடம் பெறவேண்டுமானால் அவர் தான் குடிமகன் என்பதை முதலில் நிரூபித்திட வேண்டும் என்பதாகும். இவ்வாறு பொறுப்பு வாக்காளர் மீது சுமத்தப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களில் வாக்காளர் பட்டி யலைத் திருத்தும் பணியை மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட கணக்கெடுப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. எனவே, இது திருத்தத்தை நோக்கமாகக்கொண்ட ஒன்று அல்ல, மாறாக வாக்காளர் பட்டியலிலிருந்து வாக்காளர்களை நீக்குவதற்கான ஒன்றே என்பது தெளிவாகத் தெரிந்தது. இது, உலகளாவிய கொள்கையின் அடிப்படையில் அரசமைப்புச்சட்டத்தின் கீழ் வயது வந்த அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையையே நிராகரித்திடும் என்பதைத் தெளிவாகக் குறிக்கிறது.

**குடியுரிமை தீர்மானிப்பதல்ல வாக்குரிமை வழங்குவதே!**

இரண்டாவது அம்சம், வாக்காளரின் குடியுரிமையை நிர்ணயிக்கும் உரிமையை தேர்தல் ஆணையம் அபகரிக்கிறதா என்பதாகும். அரசமைப்புச் சட்டத்தின் 326ஆவது பிரிவானது 18 வயது நிரம்பிய அனைத்து இந்தியக் குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு என்றும் அவர்களைக் கொண்டு மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. எனவே, ஒருவர் வாக்களிக்க குடியுரிமைக்கான முன் நிபந்தனை என்று எதுவும் கிடையாது. மேலும் ஒருவர் குடியுரிமை பெற்றவரா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு உள்துறை அமைச்சகத்திற்குத் தான் உண்டே தவிர தேர்தல் ஆணையத்திற்கு எந்த அதிகாரமும் கிடையாது. எனினும் தலைமைத் தேர்தல் ஆணையம் பிறப்பித்த சிறப்பு தீவிர திருத்தத்திற்கான உத்தரவு இதனை மிகவும் அலட்சியமான முறையில் புறக்கணித்தது.

**சாத்தியமற்ற கால அளவு!**

இறுதியாக, பீகார் போன்ற ஒரு மாநிலத்தில் இந்தப் பயிற்சிக்கான கால அளவு மிகவும் குறைவாக இருந்தது. அங்கு அதிக எண்ணிக்கையிலான புலம் பெயர்ந்தோர் தங்கள் வாழ்வாதாரத்திற்காக மாநிலத்தை விட்டு வெளியேறி இருந்தார்கள். மழைக் காலத்தின் போது பல பகுதிகளில் வெள்ளம் போன்ற சூழ்நிலை நிலவியது. பயிற்சி பெறாத வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (Booth Level Officers) இதனை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் என்பது நிச்சயமாக சாத்தியமற்ற ஒன்றாகும்.

**கேள்விக்குறியான இறுதிப் பட்டியல்!**

எனவே, இறுதியாக இவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை என்பது விசித்திரமானதாக இருந்தது. வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் 81 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் விடுபட்ட னர். 1 கோடியே 38 லட்சம் வாக்காளர்களின் முகவரிகள் சந்தேகத்திற்குரியன என அறிவிக்கப்பட்டன. 9 லட்சத்திற்கும் அதிகமான பெண் வாக்காளர்கள் தங்கள் வாக்களிக்கும் உரிமையை இழந்துள்ளனர். 14 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் பல தேர்தல் அடையாள அட்டைகளைக் கொண்டுள்ளனர். 100க்கும் மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட 2,258 வளாகங்கள் உள்ளன. எனவே, வெளிப்படை யான, புகார் இல்லாத மற்றும் சுத்தமான பட்டியலாக இருப்பதற்குப் பதிலாக, இறுதி வாக்காளர் பட்டியல்கள் மிகவும் கேள்விக்குறியான ஒன்றாக மாறி இருக்கிறது. பீகார் சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க.வுக்கு நன்மை பயக்கும் வகையில் தேர்தல்ஆணையத்தின் இந்த நடவடிக்கைகள் இருந்தன என்பது ஆரம்பத்திலிருந்தே தெளிவாகத் தெரிந்தது. தேர்தல் ஆணை யத்தின் சிறப்பு தீவிர திருத்த நடைமுறையைப் பாதுகாக்க பா.ஜ.க. மட்டுமே களத்தில் குதித்தது. இயற்கையாகவே, எதிர்க்கட்சிகளும் அக்கறையுள்ள குடிமக்களும் கிளர்ந்தெழுந்து நிலைமையைச் சரி செய்ய அனைத்து வழிகளையும் மேற்கொண்டனர். இவர்களால் உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இன்னமும் முடிவுக்கு வராமல் நிலுவையில் இருந்து வருகின்றன.

**தேர்தல் ஆணையத்தின் தந்திரமும் நீதிமன்றத்தில் நழுவலும்!**

ஒரு வரையறுக்கப்பட்ட இடைக்கால உத்தரவின் மூலம், உச்ச நீதி மன்றம் பன்னிரண்டாவது ஆவணமான ஆதார் அட்டையை ஏற்கும்படி தேர்தல் ஆணை யத்தைக் கட்டாயப் படுத்தியிருந்தாலும், அதிலும் கணிசமான சிக்கல்கள் இருந்தன. வாக்காளர்களின் எண்ணிக்கையில் பெரிய அளவிலான குறைவு ஏற்பட்டது. தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள் மிகவும் தந்திரமான முறையில் இருந்தன என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. வாக்காளர் பட்டியலில் 'சிறப்பு தீவிர திருத்தம்' கிட்டத்தட்ட 2003இல் மேற்கொள்ளப்பட்டதைப் போன்றதுதான் என்று உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் வாதிட்டது. உடனே உச்சநீதிமன்றம், 2003இன் வழிகாட்டுதல்களை சமர்ப்பிக்கும்படி கேட்டதும், அதனை அளித்திட தேர்தல் ஆணையம் முன்வர வில்லை. அது தொடர்பான அதிகாரப்பூர்வ ஆவணங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறி நழுவிக்கொண்டது. இதை தேர்தல் ஆணையம் உச்ச நீதிமன்றத்தில் அளித்த உறுதி வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளது. இது திறமை யின்மையை வெளிப் படுத்துவதாகவும், நிறுவன திறமையின்மையின் தரத்தைக் காட்டிக் கொடுப்பதாகவும் இருந்தது. தேர்தல் ஆணையம் தான் கூறிய பொய்களை நியாயப்படுத்துவதற்காக பொய்களுக்கு மேல் பொய்யாகச் சொல்லிக்கொண்டிருப்பது இப்போது தெளிவாகிவிட்டது. ஜனநாயக சீர்திருத்த சங்கம் (ADR Association of Democratic Reforms) உச்ச நீதிமன்றத்தில் ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட ஒரு விரிவான ஆவணத்தை சமர்ப்பித்துள்ளது. அதில் 2003ஆம் ஆண்டு வழிகாட்டுதல்கள் உள்ளன. இந்தப் பயிற்சிக்குப் பிறகு எழுப்பப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகள் குறித்தும் தேர்தல் ஆணையத்தின் சூழ்ச்சியை இவை விரிவாகக் காட்டுகின்றன.

**திருத்தத்தின் நோக்கமும் அமித் ஷாவின் அறிவிப்பும்!**

வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் கொண்டுவந்ததன் நோக்கம் குறித்து இன்னமும் எவருக்காவது சந்தேகம் இருந்தால் அதனை நரேந்திர மோடியின் வலது கரமாக விளங்கும் உள்துறை அமைச்சர் அமித் ஷா இது குறித்துக் கூறியிருப்பதைக் கேட்டால் தீர்ந்துவிடும். வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மூலம் குடிமக்கள் அல்லாதவர்களைக் கண்டறிந்து, நீக்கி, நாடு கடத்துவதே இந்த நடவடிக்கை என்று அவர் சமீபத்தில் அறிவித்திருக்கிறார். இந்தக் கூற்றை வலுப்படுத்தும் வகையில் அவர் நாட்டில் முஸ்லிம் மக்கள்தொகை அதிகரித்திருப்பதற்குக் காரணம் முஸ்லிம் பெண்கள் அதிக அளவில் கருவுறுவதால் மட்டும் அல்ல, மாறாக பெரிய அளவில் முஸ்லிம்கள் ஊடுருவி வந்திருப்பதுமாகும் என்று தெரிவித்திருக்கிறார். நாட்டில் முஸ்லிம் மக்கள் தொகை 24.6 சதவீத விகிதம் அதிகரித்திருக்கும் அதே சமயத்தில், இந்து மக்கள் தொகை 4.5 சதவீதம் குறைந்திருக்கிறது என்றும் அமித் ஷா கூறியிருக்கிறார். எனவே வாக்காளர் பட்டியலில் தீவிர சீர்திருத்தத்துடன், அவரது கட்சியும் "ஊடுருவல்காரர்களை அடையாளம் கண்டு, அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவதை உறுதி செய்ய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும், பின்னர் அவர்களை அவர்களின் நாடுகளுக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படும்." என்றும் அறிவித்திருக்கிறார்.

**உள்துறை அமைச்சகத்தின் தோல்வி!**

இவ்வாறு அமித் ஷா, வாக்காளர் பட்டியலில் தீவிர சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவதன் நோக்கம் குறித்து தெளிவாக விளக்கி இருக்கிறார். இதில் ஒரே சோகம் என்னவெனில், பஹல்காமில் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்ட பயங்கரவாதிகளைப் பிடிக்க அவர்கள் தவறியது போலவே, அவரது அமைச்சகமும் ஊடுருவல்காரர்களைக் கண்டறியத் தவறிவிட்டது. இப்போது தேர்தல் ஆணையத்தின் முதுகில் உட்கார்ந்து கொண்டு, ஊடுருவல்காரர்களுக்கு எதிராக துப்பாக்கிச்சூடு நடத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறது. எனவே தான் வாக்காளர் பட்டியலில் தீவிர சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவதை எவரும் எதிர்க்கக்கூடாது என்று அவரது தொனி அச்சுறுத்துகிறது. இந்தப் பணி சட்டப்பூர்வமாகவுள்ள இந்தியக் குடிமக்களின் வாக்குரிமையை ஏராளமாகப் பறித்துக்கொண்டிருக்கிறது என்பது பீகாரில் நடை பெற்றுவரும் நடவடிக்கைகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

**மக்கள் தொகை ஆய்வு வெளிப்படுத்தும் உண்மை**

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு செயல் பட்டுக்கொண்டிருக்கும் பியூ ஆராய்ச்சி மையம் (Pew Research Centre), இந்தியாவில் உள்ள மக்கள்தொகை குறித்து மதரீதியாகப் பிரித்து ஓர் எதார்த்தமான ஆய்வினை வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வானது, ஒட்டுமொத்த இந்தியாவிலும் கருவுறுதல் விகிதம் முன்னேறிய பொருளாதாரங்களைப் போலவே கிட்டத்தட்ட அதே விகிதத்தில் குறைந்துள்ளது என்பதை நிறுவுவதோடு மட்டுமல்லாமல், இந்திய முஸ்லிம்களிடையே, தேசிய குடும்பம் மற்றும் சுகாதார கணக்கெடுப்பின் தரவுகளின் அடிப்படை யில், 1992இல் ஒரு பெண்ணுக்கு 4.4 குழந்தைகளாக இருந்த கருவுறுதல் விகிதம் 2015இல் 2.6 குழந்தை களாக வியத்தகு முறையில் குறைந்துள் ளது என்றும் குறிப்பிட்டுள்ளது. அமித் ஷாவின் கற்பனைக் கதைக்கு எந்த அர்த்தமும் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. இந்தத் தேர்தல் காலத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மதவெறித் தீயை விசிறிவிட வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாகும்.

**ஊடுருவல்காரர்கள் நீக்கம் பூஜ்யம்!**

ஊடுருவல்காரர்களை அடையாளம் காண நடத்தப்பட்ட சிறப்பு தீவிர சீர்திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணையம் அடையாளம் கண்ட ஊடுரு வல்காரர்களின் எண்ணிக்கை வெறும் பூஜ்ஜியமாகும். தொடர்ச்சியான கேள்விகளுக்கு மத்தியில், இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், இறுதி வாக்காளர் பட்டியலில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டு நீக்கப்பட்ட வெளிநாட்டினரின் புள்ளி விவரங்களைக் கூறத் தவறிவிட்டார். மிகவும் உன்னதமான நிலையிலிருந்த தேர்தல் ஆணையத்தின் நடைமுறைகள் இவ்வாறாக வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர சீர்திருத்தம் என்ற பெயரில் மிகவும் அருவருக்கத்தக்க ஒன்றாக மாறியிருப்பது வெட்டவெளிச்சமாகி இருக்கிறது.

நன்றி:
'தீக்கதிர்'
22.10.2025



நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் பணிகள், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளின் நகர்வு பணிகள் தொடர்பாக துறை அலுவலர்களுடனான கலந்தாய்வு கூட்டம் அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. உடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், என்.கௌதமன், ஜெ.முகம்மது ஷா நவாஸ் எம்.எல்.ஏ., நாகைமாலி எம்.எல்.ஏ. மற்றும் பலர் உள்ளனர்.

### திருவெறும்பூர்

# வாழவந்தான் கோட்டையில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேரில் ஆய்வு!

திருவெறும்பூர், அக்.25-

திருவெறும்பூர் வாழவந்தான் கோட்டை முதல் நிலை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்றும், நாளையும் நடைபெறும். முகாமினை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்.

திருவெறும்பூர் அருகே உள்ள வாழவந்தான் கோட்டை முதல் நிலை ஊராட்சியில் வாழவந்தான் கோட்டை புது பர்மா காலனி பழைய பர்மா காலனி, அய்யம் பட்டி தொண்டமான் பட்டி, பெரியார் நகர் ஆகிய பகுதிகளை கொண்ட பன்னிரண்டு வார்டுகள் உள்ள ஊராட்சியில் சுமார் 12,500க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்

மேலும் இப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் வாழவந்தான் கோட்டை ஊராட்சியில் உள்ள சமுதாய கூடத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு

முகாமில் அனைத்து துறைகளையும் ஆய்வு செய்து பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் குறித்தும் அதற்கு தீர்வு காண்பது குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும் முகாமில் வருவாய்த்துறை சார்பாக நத்தம் பட்டா 6 பேருக்கும் இதே போல் வகுப்பு வாரிசு சான்றிதழ் 2 பேருக்கும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்.

மேலும் இந்தமுகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜலட்சுமி, திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கருணாநிதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆனந்த் மற்றும் அண்ணாதுரை, ஊராட்சி செயலாளர் கண்ணன், மற்றும் ஊராட்சியைச் சார்ந்த பொதுமக்கள், அரசு அதிகாரிகள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் .



சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம், அரிசிப்பாளையத்தில் 22.10.2025 அன்று நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சிறுக்கடம்பூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கழக தோழர் எஸ்.கே. இரவிச்சந்திரன் மகன் அரியலூர் மாவட்ட கழக பொறியாளர் அணி துணை அமைப்பாளர் விக்னேஷ் –சிவசக்தி திருமண விழாவில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் செந்துறை தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் பூ.செல்வராஜ், செந்துறை வடக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் வீ. எழில்மாறன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய , நகர கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.